# SOUTH EASTERN UNIVERITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007

## HELD IN MAY - 2007

## GGY 2.12 – RESOURCES UTILIZATION & SOCIAL GEOGRAPHY

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

## பகுதி – I

01. "ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்தி முனைப்புக்கள் நாட்டின் அபிவிருத்தியில் ஏன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது" ஆதாரங்களுடன் விளக்குக.

02. உலக நாடுகளின் சனத்தொகை வளர்ச்சியானது கடந்த நூற்றாண்டுகளில் எவ்வாறு வேறுபட்டுச் சென்றுள்ளது என்பதனை பொருத்தமான ஆதாரங்களுடன் விளக்குவதுடன், அதற்குச் சாதகமாக அமைந்த காரணிகளையும் ஆராய்க.

03. வளங்கள் என்பதனை வரையறை செய்வதோடு, பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

    (அ) மனித வளம் (Human Resource)
    (ஆ) புதுப்பிக்கக்கூடிய வளங்கள்
    (இ) மீள் பாவனைக்கு உட்படுத்தப்படும் வளங்கள்

04. அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தினால் அம்பாரை மாவட்ட கடற்கரையோர இயற்கை வளங்கள் பல்வேறு அழிவுக்கு உட்பட்டுள்ளன என்பதனை ஆதாரங்களோடு விளக்குக.

## பகுதி – II

05. "அபிவிருத்தி அடைந்த நாடுகளால் கனிய வளங்கள் அதிக பாவனைக்கு உட்டுத்தப்பட்டு வெறுமையாக்கப்படுகின்றன." இதனைப் பற்றி அறிக்கை ஒன்று தயாரிக்குக.

06. அண்மைக்காலங்களில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் இடம்பெற்று வரும் துரிதமான நகராக்கத்தின் காரணமாக பல்வேறு வகையான சமூக, பொருளாதார, சூழலியற் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பதனை பொருத்தமான உதாரணங்கள் துணை கொண்டு விளக்குக.

07. உலகின் உயர்தர மீன்பிடி வலயங்களில் மீன்பிடிக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்கினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>மூன்றிற்கு</u> சிறுகுறிப்பெழுதுக.

    (அ) புவி வெப்பமடைதல்
    (ஆ) பாலை நிலமாகுதல்
    (இ) இலங்கையின் மழைக்காடுகள்
    (ஈ) நகர வெளிகள்
    (உ) மல்தூசின் சனத்தொகைக் கோட்பாடு

***